விலை ரூபா 1—25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 மார்கழி 12 ர. ஆகிர் 24 இதழ் 316

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 27-12-1986

## ● ஷெல் தாக்குதல்

# லொறியுடன் '45 பரல்கள்' டீசல் தீப்பிடித்துச்சேதம்

யாழ்ப்பாணம், சனி

வவனிய விலிருந்து டீசல் ஏற்றிக்கொண்டு யாழ்ப்பாணம் நோக்கி வந்த லொறி ஒன்றின் மீது 'ஷெல்' தாக்கியதில் அந்த லொறி முற்றாக தீப்பற்றி எரிந்து கொண்டிருக்கிறது

நேற்றுக் காலை வவனியாவிலிருந்து 45 பரல்களில் டீசல் ஏற்றிக்கொண்டு யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த சனியார் லொறி ஒன்றின்மீது முள்ளியவளைப் பகுதியில உள்ள இராணுவ முகாமொன்றிலிருந்து ஏவப்பட்ட 'ஷெல்' தாக்கியதில் அந்த லொறியில் இருந்த டீசல் பரல்களில் தீப்பிடித்து அந்த லொறி நாசமாகியது.

இந்த லொறியில் வந்த அனைவரும் ஷெல் தாக்கிடதும் லொறியிலிருந்து தப்பிக் காட்டுப்பகுதியினுள் ஓடிவிட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

முல்லைத்தீவு முள்ளியவளை

(5ம் பக்கம் பார்க்க)

## ● வின்சன்ட் பெரேரா தலைமையிலான முதலாவது

# அரச நல்லெண்ண தூதுக்குழு

# விடுதலைப்புலிகள் இன்று சந்திப்பு

## காங்கேசன்துறை பட்டினசபை மண்டபத்தில் இடம் பெறும்

(நமது விசேட நிருபர்)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் நேரடிப் பேச்சுவார்த்தைகளை நடத்தும் வகையில் முதலாவது அரசதரப்பு நல்லெண்ண தூதுக்குழு அமைச்சர் வின்செண்ட் பெரேரா தலைமையில் இன்று யாழ்ப்பாணம் வருகின்றது. இக்குழுவிற்கும், புலிகள் இயக்கத்தினருக்குமிடையில் சந்திப்பு இன்று காங்கேசன்துறையில் இடம் பெறும்.

எட்டியாந்தோட்டை எம்.பியும் பாராளுமன்ற அலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சருமான திரு வின்செண்ட் பெரேரா தலைமையில் வரும் அரச தரப்புக்குழு விசேட விமானத்தில் இன்று காலை எட்டு மணிக்கு பலாலி விமானநிலயம் வந்தடையும் முன்பு இடம்பெற்ற அனைத்துக்கட்சி மாநாட்டின் செயலாளர் டயஸ் அம்பசிங்க சட்டத்தரணி மார்க் பெர்னாண்டோ ஆகியோர் இந்த அரச தரப்பு நல்லெண்ணக் குழுவில் இடம் பெறும் ஏனைய உறுப்பினர்களாவார்.

இவர்களுடன் முன்னாள் காங்கேசன்துறைப் பட்டின

(8ம் பக்கம் பார்க்க)

## செட்டிக்குளம் அகதிகளுக்கு ரூ 8 1/2 லட்சம் நிவாரண உதவி

வவனியா, வெள்ளி

செட்டிக்குளம் அகதிகளுக்கு அரசாங்கத்தினால் ரூபா எட்டரை லட்சம் நிவாரண உதவிப் பணமாக வழங்கப்படவுள்ளது.

வவனியா அரசாங்க அதிபர் கே வி. லோகேஸ்வரன் மேற்கொண்ட தீவிர முயற்சியின் பயனாகவே இந்த உதவி வழங்கப்படவிருக்கின்றது.

செட்டிகுளம் பகுதியில் அரச படைகள் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகளின்

(5ம் பக்கம் பார்க்க)

## குண்டுவெடிப்புபின்னணியில் எதிர்க்கட்சி

(சென்னை)

தமிழகத்தில் கடந்த ஒரு வார காலமாக இடம்பெற்ற குண்டு வெடிப்புச்சம்பவங்களுக்கு இங்குள்ள முக்கிய எதிர்க்கட்சியொன்றே பொறுப்பாகும் என அறியப்பட்டுளளது.

இக்குண்டு வெடிப்புச் சம்பவங்களில் இலங்கைத் தமிழ் போராளிகள் சம்பந்தப்பட்டிருப்பதற்கான ஆதாரங்கள் போதுமானளவு காணப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

(8ம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவு மாவட்டத்தில் மூளைக்காய்ச்சல்: 6 பேர் பலி

முல்லைத்தீவு, வெள்ளி

முல்லைத்தீவு மாவட்டத்தில் முள்ளியவளை, தண்ணீரூற்று வற்றாப்பளை பகுதியில் தற்பொழுது மூளைக்காய்ச்சல் நோய் வேகமாகப்பரவி வருகின்றது இக்காய்ச்சலுக்கு இதுவரை ஆறுபேர் பலியாகியுள்ளனர்.

முள்ளியவளை : தண்ணீரூற்று அத்தியாவசியசேவைக் குழுவினர் இந்நோயிலிருந்து மக்களைப்பாதுகாக்க பன்றி ஆடு, மாடு, ஆகியவற்றின் இறைச்சிகளை சாப்பிடவேண்டாம் எனவும் நுளம்புக்கடியில் இருந்து விலகிப் பாதுகாப்பாக இருக்குமாறும் ஒலிபெருக்கி மூலம் அறிவித்துவருகிறார்கள்.

[கி]

## டக்ளஸ் தேவானந்தா பிணையில் விடுதலை

சென்னை, டிச 26

சென்னை சூளை மேட்டுப்பகுதியில்இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட ஈ பி. ஆர் எல் எவ் இயக்கத்தைச் சேர்ந்த டக்ளஸ் தேவானந்தா

(5ம் பக்கம் பார்க்க)

## பெப்ரவரியில் க. பொ. த. சா/த பரீட்சை முடிவுகள்

கொழும்பு, வெள்ளி

இம்மாதம் முற்பகுதியில் நடைபெற்ற க. பொ. த. சாதாரணப்பரீட்சை பெறுபேறுகள் 87ம் ஆண்டு பெப்

(5-ம் பக்கம் பார்க்க)

## பூநகரி வாடியடி முகாமில் இராணுவம் கடும் சோதனை

(கிளிநொச்சி நிருபர்)

பூநகரி வாடியடியிலுள்ள இராணுவமுகாமில் பிரயாணிகள் மீது கடந்த சில தினங்களாக சோதனைகள் இடம் பெற்றுவருகின்றன.

(5ம் பக்கம் பார்க்க)

## முள்ளியவளையில்

# இராணுவம் புலிகள் கடும் மோதல்!

(யாழ்ப்பாணம் சனி)

முல்லைத்தீவு மாவட்டத்தில் முள்ளியவளைப் பகுதியில் நேற்று நண்பகல் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்துக்குமிடையில் இடம் பெற்ற நேரடி மோதலில் இராணுவம் பின்வாங்கியுள்ளதாக விடுதலைப் புலிகள்

(5-ம பக்கம் பார்க்க)

## யார் இந்த இளம் பெண்?

யாழ்ப்பாணம் சனி

யாழ். பெரியாஸ்பத்திரியில் நேற்று முன்தினம் நஞ்சருந்திய நிலையில் 16ம் வாட்டில் அனுமதிக்கப்பட்டிருந்த 30 அல்லது 35 வயது மதிக்கத்தக்க இளம் பெண் ஒருவர் நேற்று மரணமானார்

சிவப்பு டிசைன் போடப்பட்டிருந்த சேலை அணிந்திருந்த இப்பெண் கழுத்தில் சங்கிலி, கையில் காப்புகள், காதில் தோடுகள் அணிந்திருந்துள்ளார்.

சங்கிலியிலுள்ள பதக்கத்தில் ஓம் என்று எழுதப்பட்டுள்ளது

இப்பெண்ணின் சடலம் அடையாளம் காணப்படுவதற்காக ஆஸ்பத்திரி சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

## வடக்கு-கிழக்கில்

## 32 தபாலதிபர்களின் இடமாற்றம் இரத்து

யாழ்ப்பாணம், சனி

வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த தபால் அதிபர்கள் சுமார் 32 பேரின் இடமாற்றங்கள் இரத்துச் செய்யப்பட்டிருப்பதாகத் தெரிய வருகின்றன.

ஸ்ரீலங்கா தபால் தந்திச் சேவையாளர் சங்க வடமாகாண கிளைத்தலைவர் திரு குகதாஸன் தலைமையில் கொழும்புக்குச் சென்ற குழுவொன்று அஞ்சல் திணைக்கள அதிபர் நாயகத்தைச் சந்தித்துப் பேசியதையடுத்தே இந்த இடமாற்றம் ரத்து செய்யப்பட்டுள்ளது

வடபகுதியில் தபால் நிலயங்களில் வேலை நேரங்கள் சமீபகாலமாக குறைந்துள்ளதையடுத்து மேற்படி தபால் அதிபர்கள் கொழும்புக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்தனர்.

பிரயாண ஒழுங்கு

GLORIA TRAVELS

* Norway * Germany
* France * Canada

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகள் செய்து தருவதுடன் எமது பிரயாண முகவர் உடன் அழைத்துச் செல்வார்.

மற்றும்

பாஸ்போட், பொண்ட் [BOND] விசா, ரிக்கற் ஆகியனவும் செய்து கொடுக்கப்படும்.

GLORIA TRAVELS

சின்னத்தம்பி அவெனியூ, மானிப்பாய்.

(A 3263)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள விடியோ டெக் நஷனல் வி. 300ம் ரீவைண்டரும் விற்பனைக்குண்டு தொடர்பு: S. யோகன் 80/3, சுவாமியார் வீதி கொழும்புத்துறை மேற்கு, யாழ்ப்பாணம். [A 3400]

தாய், நய்க்கூடு. பழைய புதிய ஒ/சீச தளப் பெட்டி பல விதத் தளபாடங்கள் விற்பனைக்குண்டு. பதிமநாதன் பிறிமற்றிசேவிஸ். திருநெல்வேலி. [C 6568]

யாழ் / பல்கலைக் கழகத்திற்கு அண்மையில் 1½ பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. நேரடியாகத் தொடர்பு கொள்க A B சபாநாதன், 14, மணத்தறை லேன், கந்தர்மடம் (C 6517)

நத்தார் புதுவருட வாழ்த்துக்கள், திருமண அழைப்பிதழ்களும், சகல விலைகளிலுமான முத்திரை வகைகளும் பெற்றுக்கொள்ள அரஸ் ஜவுளி அகம், 146. நவீன சந்தை. யாழ்ப்பாணம் தொலைபேசி: 24001 [C6299]

Broiler இறைச்சிக் கோழிகள் நியாயமான விலைக்கு பெற்றுக்கொள்ளலாம். சுத்தம் செய்து கொடுக்கப்படும். Nallur Farm Centre, (நல்லூர் வீடியோ சென்ரர்) 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (C 6402)

தமிழ் ஆங்கில தட்டச்சு இயந்திரம் New Key Bord றெமிங்டன் 26'', 18'' ஆங்கில தட்டச்சு போட்டபிள் Brother, அன்டவூட் புதிது. தொடர்பு, நிர்வாகி சங்கர், பிறிலியன் அக்கடமி, மகாத்மா வீதி, நெல்லியடி, கரவெட்டி. [C-6523]

சகலவிதமான அப்பியாசக் கொப்பிகள், பாடசாலை உபகரணங்கள் உள்ளூரில் தயாரிக்கப்பட்டு நியாயவிலையில் விற்பனை செய்யப்படுகின்றன. மற்றைய நிறுவனங்களிலும் பார்க்க வியாபாரிகளுக்கு விசேடகழிவுண்டு. தயாரிப்பாளர்களும் விற்பனையாளர்களும் லக்ஷ்மி ஸ்ரோர்ஸ் 644, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (காப்புறுதிக் கூட்டுஸ்தாபனம் முன்). C 6434

## தேவை

உள்ளூர் உற்பத்திப் பொருட்களை வீடு தோறும் சென்று விற்பனை செய்வதற்கு அனுபவம் உள்ள விற்பனைப் பெண் பிள்ளைகள் தேவை. விபரங்கட்கு விளம்பர இல 6510, C/o ஈழநாடு யாழ்ப்பாணம். (C 6510)

பிறசியர் தைப்பதில் நன்கு அனுபவம் உள்ள பெண்கள் உடனடியாகத் தேவை. பிறியா காமென்ஸ், 14, மேல் மாடி, நவீன சந்தை. திருநெல்வேலி. (C 6558).

புத்தகம் கோர்த்துக் கட்டக்கூடிய அனுபவமுள்ள பைண்டர் தேவை. உடன் நேரில் வரவும், செட்டியார் அச்சகம். யாழ்ப்பாணம். (C 6521)

## சேவை

135 M. M. கலர் பிலிம் சுருள்கள் எதுவாகிலும் Processing and Printing செய்பவர்களுக்கு போஸ்காட் சைஸ் ரூபா 4-75 Proce sing only 20/- விபரங்களுக்கு கொழும்பு ஸ்ருடியோ, யாழ்ப்பாணம். A-3357

சகல இன Video - Deck Colour, Black and White T V சகல பழுதுகளும் நீண்டகால அனுபவத்துடன் குறித்த தவணையில் மிக நுணுக்கமாக ஆராய்ந்து திருத்திக் கொடுக்கப்படும், விபரங்களுக்கு: Electro Technical Institution, Kalvalai, Sandilipay. (C 6535)

## வகுப்புக்கள்

ஆண்டு 4, 5, 6, 7, 8, 9 புதிய வகுப்புக்கள் ஆரம்பம் 2-01-1987, மொடேன் எடியுகேசன் சென்ரர், கரவெட்டி. [C 6531]

Spoken English புதிய பிரிவுகள் திங்கள், புதன், வெள்ளி காலை 6மணி—7மணி 9மணி 10மணி ஆரம்பம்: 29-12 86 S B Iyar, 12, வைமன் வீதி, நல்லூர். C-6483

Radio, T. V. வயறிங், வெல்டிங், பிளம்பிங், மோட்டோர் மெக்கானிசம், தட்டெழுத்து. சுருக்கெழுத்து புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன. சான்றிதழ் பெறுமதியானது. தொடர்பு:- Vispa Engineering Hall, 328 நாவலர் வீதி யாழ்ப்பாணம். (C-6502)

Quantity Surveying Part-I (City and Guild - London) வகுப்புக்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன Part II ஆனவகுப்பு 14-12-86 அன்று ஆரம்பமாகிவிட்டது Diploma in Draughtsmanship and Diploma in Quantity Surveying- 1987 New Batch (English medium) ஜனவரி முதல் வாரத்தில் ஆரம்பமாகவுள்ளன 31-12-86க்கு முன் நேரில் விண்ணப்பிக்கவும். அதிபர். உயர்கலைக்கல்லூரி-ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். C 6289

ஆறு சொடக்கம் G. C. E சாதரணதரம், உயர்தர வகுப்பு ஆங்கிலத்தை வட்டுக்கோட்டை, மாவடி, கலாநிலயத்திலும், பல்கலைக்கழக தொழில் நுட்ப, ஆசிரியர், தொழிலாளருக்கான ஆங்கிலத்தை வார இறுதி பிற்பகலில் சித்தங்கேணிச்சந்தி மாதர் சங்கக் கட்டிடத்திலும், முன்னாள் அதிபர், ஆங்கிலவிரிவுரையாளர், திணைக்கள ஆங்கிலப்பரீட்சகர் கயிலாயநாதன் போதிக்கின்றார் பாட்டு, வயலின், மிருதங்கம், நாட்டியம் பிரபல வித்துவான்களால் கற்பிக்கப்பெறுகின்றன. புதிய வகுப்புக்கள் உடனே தொடங்கும். [C 6513]

# இடமாற்ற அறிவித்தல்

13, 14 பெரிய கடையில் இயங்கிய ஜி. எஸ். லிங்கநாதன் அன் கோ. ஸ்தாபனம் 79, கே. கே. எஸ். வீதி M O சன்ஸ் கூடத்துக்கு மாற்றப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளருக்கு அறியத்தருகின்றோம்.

**ஜி. எஸ். லிங்கநாதன் அன் கோ.**

(C 6428)

## பயிற்சி

தொழில் பயிற்சி டிப்பிளோமா வகுப்புக்கள் ஆரம்பம் 2-1-1987 Telex Operators International இரு பாலாரும் றேடியோ, ரெலிவிஷன், எலக்றிக்கல் வயறிங் சான்றிதழ்கள் வழங்கப்படும் Electros - Thirunelvely Junction C 6389]

# 3-வது ஆண்டு நினைவஞ்சலி



திருமதி புவனேஸ்வரி கனகலிங்கம்

மலர்வு: 30 0-1950
உதிர்வு: 30-12-1983
திதி: 27-12-1986

அம்மா! மரணம் தவிர்க்க முடியாதது. அதை நாம் தெரிந்தாலும், தங்களின் இடத்தை நிரப்ப முடியுமா? அம்மா தங்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும், அன்பு மகள் க. திருச்செல்வி, அன்பு கணவன் நா. கனகலிங்கம், மற்றும் ஐயா, அம்மா, அண்ணா, அண்ணி, உற்றார், உறவினர்.

'முருகன் அருள் வாசம்',
மிருசுவில்வடக்கு,
மிருசுவில்.

C 6512

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திரு கணபதிப்பிள்ளை பிள்ளையினர் (பொன்னுத்துரை)

பருத்தித்துறை

(இலங்கை கூட்டுறவு மொத்த விற்பனை இலாகா இளைப்பாறிய இலிகிதரும், பருத்தித்துறை துவாரகா ஸ்ரோர்ஸ் உரிமையாளரும், ஸ்ரீவில்லிபுர ஆழ்வார் ஆலயதொண்டரும்)

மாதா மடியில்:
24-05-1924
மாயோன் மடியில்:
07-01-1986

எமது குடும்பத்தின் ஒளி விளக்காகத் திகழ்ந்து எமக்கெல்லாம் வழிகாட்டிய அன்புத் தெய்வமே! எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத் துயில் கொண்ட உங்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

திருமதி பிள்ளையினர் சிவபாக்கியம்.

துவாரகை
புலோலி கிழக்கு,
பருத்தித்துறை.

## கல்வி

ஐந்தாம் தரத்திலிருந்து G. C. E (O/L வரை கட்டாய பாடமாகிய கணித பாடத்தை புதிய பழைய கல்வித் திட்டத்திற்கமைய 18 வருட அனுபவமுள்ள ஆசிரியரினால், ஆரம்ப அறிவிலிருந்து விசேட சித்திக்கு நுணுக்கமான முறையில் குறைந்த காலத்தில் வீடுகளிற் சென்று கற்பிக்கப்படும். மற்றும் (O/L (A/L) இற்குரிய கலை, வர்த்தக, விஞ்ஞான ஆங்கில பாடங்களும் சிறப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களினால் கற்பிக்கப்படும் காலை 8-00 மணிக்குள் வீட்டிற் சந்திக்கவும். அல்லது கடிதத் தொடர்பு கொள்ளவும். ஆறுமுகநாதன், 10. கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குழி, (C 6506)

## தவறிவிட்டது

வெள்ளை பேசுடன் அடையாள அட்டை, 3 போட்டோக்களும், Brown paper bag க்குள்ளே சின்ன பார்சல் துரக்க ஜி ரெக்ஸ்ரைல் bag உடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் எம். அருளானந்தம் 59, புதுறோட். அத்தியடி என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [C 6541]

**வியாபாரம் பெருக**

**விளம்பரம் செய்க**

புதிய தொலைபேசி தொடர்பு நிலையம்
இன்று (27 12-1986) சனிக்கிழமை தொடக்கம்
மங்களகரமாக இயங்குகின்றது

நொடிப் பொழுதில் உங்கள் உற்றார், நண்பர்களுடன் தொடர்புகொள்வதற்கு நம்பிக்கையான சர்வதேச, உள்நாட்டு தொலைபேசி ஸ்தாபனம்:

**ரூன்ஸ் வேல்ட் கொம்யூனிக்கேசன்ஸ்**

**TRANSWORLD COMMUNICATIONS**

(மவுண்ட்கார்மல் தேவாலயம் முன்பாக)
பாங்ஷால் வீதி, யாழ்ப்பாணம்

★ பாஸ்போர்ட்-விஸா-விமானடிக்கெட் முகவர்கள்.

தொலைபேசி: 23203 [C-6569]

# தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு

# எமது நன்றி

5-4-86 அன்றிரவு எமது இல்லத்தில் வைத்துக் கொள்ளையடிக்கப்பட்ட வீடியோ சாதனங்களில்,

1. நஷனல் G-1 மொடல் வீடியோ கமெரு
2. சோனி 3000 மொடல் வீடியோ கமெரு
3. ஜே வி. சி 88 மொடல் வீடியோ கமெரு
4. வீடியோ லைற் ஒன்று
5. ஹிற்றுச்சி மின்வலுவேற்றி ஒன்று
6. இரண்டு வீடியோ கமெரு ஸ்ராண்ட்

ஆகிய பொருட்கள் அண்மையில் நடந்த சம்பவங்களின்போது தமிழீழ விடுதலைப் புலிகளினால் மீட்கப்பட்டு 23-12-86ல் எமமிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இந்த நற்பெரும்பணியில் எமக்காக ஒத்துழைத்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினருக்கு எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

பொ புலவர்,
உரிமையாளர்:

**புலவர் வீடியோ**

கோண்டாவில் வடக்கு. [C-6551]

# கிறிஸ்தவ இறையியல்

# பட்டதாரி வகுப்புக்கள்

செரம்பூர் சர்வகலாசாலை B Th. (Bachelor of Theology B D (Bachelor of Divinity) வகுப்புகளுக்கான விரிவுரைகள்

**1988ல் ஆனி மாதம் கிறிஸ்தவசேவ ஆச்சிரமத்தில் ஆரம்பமாகும்.**

பெப்ரவரி 1988இல் நடைபெறும் பிரவேசப் பரீட்சைக்குரிய ஆயத்த வகுப்புக்கள்

**1987 பங்குனி 1-ம் திகதி ஆரம்பமாகும்,**

குறைந்தபட்சம் G. C. E. (O/L) சித்தியடைந்த கிறிஸ்தவர்கள் முழுநேர மாணவர்களாக பயிற்சி நெறியை பின்பற்றுவதற்கு விண்ணப்பிக்கலாம்.

**மேற்படி பயிற்சிநெறியில் அனுமதிக்கப் படுவோருக்கு உதவிப்பணம் (SCHOLARSHIPS) கொடுக்கப்படும்.**

திருப்திகரமாக பயிற்சிவகுப்புக்களை முடித்து வெளியேறுவோருக்கு தென்னிந்திய திருச்சபை யாழ்ப்பாண ஆதீனத்தில் முழுநேர ஊழியர்களாக பங்குபெற வாய்ப்புண்டு.

முழுவிபரங்களுக்கும் உங்கள் விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய

**கடைசித் திகதி: ஜனவரி 31, 1987**

முகவரி:-

பதிவாளர்,
பொதுநிலையாளர் - நற்தூதுப்பணி
பயிற்சி நிலையம்.
மே/பா கிறிஸ்தவசேவ ஆச்சிரமம்,
மருதனமடம், சுன்னாகம்.

(C-6529)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சவூதிஅரேபியாவில்தரையிறங்கமுயன்ற ஈராக் விமானம் வெடித்து சிதறியது; 62 பேர் பலி

## 32 பேர் படுகாயம், பெய்ரூட்டில் புரட்சிக்குழு உரிமை கோரியுள்ளது

றியாட், டிச. 26 சவூதி அரேபியாவில் உள்ளதொலைதூரபாலைவனப் பகுதி விமான ஓடுதளத்தில் அவசரமாகத் தரையிறங்கமுயன்ற ஈராக்கிய பயணிகள் விமானமொன்று வெடித்துச் சிதறியதில் 62 பிரயாணிகள் கொல்லப்பட்டனர்

இவ்விமானத்தில் பயணம் செய்தவர்களில். இறந்தவர்களைவிட 32 பேர் படுகாயமடைந்துள்ளதாகவும், 12பேர் காயமெதுவுமின்றித் தப்பியுள்ளதாகவும் சவூதி அரேபிய பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

பக்தாத்திலிருந்து அம்மான் சென்றுகொண்டிருந்த போயிங்-737 என்ற இந்த விமானம் இனந் தெரியாத குழுவொன்றினால் கடத்தப்பட்டதாக ஜோர்டான் தெரிவித்துள்ளது.

விமானப் பாதுகாப்புப் பிரிவினருக்கும் துப்பாக்கி ஏந்திய நால்வருக்குமிடையே நடந்த துப்பாக்கிச் சண்டையின் போது இறங்க முயன்ற விமானத்தில் இரு குண்டுகளை விமானக் கடத்தல்காரர்கள் வெடிக்கச் செய்ததாக உயிர் தப்பியவர்களில் ஒருவரான முன்னாள் ஜோர்டான உள்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்

'ராடர்' திரையிலிருந்து காணாமற்போன விமானத்தின் நிலைபற்றிப் பலமணி நேரம் அறியமுடியாமலிருந்தது

பெய்ரூட்டில் இதுவரை அறிமுகமாகாதபுரட்சிநடவடிக்கை என்ற குழு இந்த விமானக் கடத்தலுக்கு உரிமை கோரியுள்ளது.

ஈராக்கில் தனது ஆதரவாளர்கள் மூன்றுபேர் சிறை வைக்கப்பட்டுள்ளதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக இந்தக் குழு கூறியிருக்கிறது. [ஒ]

### சமமாக முடிந்தபோட்டி

சுன்னாகம், வெள்ளி தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை விளையாட்டுக் கழகத்திற்கும் காங்கேசன்துறை டிபாநிசந்தோர் விளையாட்டுக் கழகத்திற்கும் இடையேநடைபெற்றசிநேகபூர்வமான உதைபந்தாட்டத்தில இரு கழகங்களும் இரு கோல்களை போட்டு வெற்றி தோல்வியை சமமாக்கி கொண்டன. (வா)


## மன்சேற்று - 200
### பங்கசு கொல்லி




**பிரதான உபயோகம்:-**

இது உருளைக்கிழங்கு, மிளகாய், தக்காளி, கோவா, செலரி; கரட், பீட்ரூட், சலாது போஞ்சி, நெல் வெங்காயம், நிலக்கடலை, முந்திரிகை, ரோசா, ஒக்கிட் மற்றும் அழகுக்காக வளர்க்கப்படும் பயிர்கள் ஆகியவற்றைப் பீடிக்கும் நோய்களான முன்வெளிறல், பின் வெளிறல், அக்கிரக்னேஸ், ஒல்டனேரியா, இலைப்புள்ளி நோய், பவுடர் மில்டிவ் பூசண நோய், சேர்க்கொஸ்போரா இலைப்புள்ளி நோய் ஆகிய பங்கசு நோய்கள் பலவற்றை முற்றாக அழிக்கின்றது.

சில்லறை விலை: 500 கிறும் 80/- ரூபா.

**லங்கெம் விவசாயிகளின் தோழன்**

விபரங்களுக்கு:-

திரு. V. வடிவேல்,
லங்கெம் பிராந்திய விற்பனை நிலையம்,
219, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்,
தொலைபேசி:- 23454

(A-3344)



இதோ! முற்றிலும் இலவசம்!!
அங்கர் பால்மா பாவனையாளருக்கு

## ஜோண்ஸ் ஓவர்சீஸ் ஸ்தாபனத்தார்

தரும்
**நத்தார் புத்தாண்டு நற்செய்தி:**

எமது அங்கர் மாவட்ட விநியோகஸ்தர்களான ஸ்ரான்லி வீதியில் அமைந்திருக்கும்

★ சிற்றி ஏஜென்ஸி ★

ஸ்தாபனத்திடமிருந்து ஒரு அங்கர் மட்பாண்ட கோப்பையை முற்றிலும் இலவசமாகப் பெறுங்கள். நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் ஏழு அங்கர் 400 கிறும் பக்கெட்டின் அங்கர் என குறிப்பிடப்பட்டிருக்கும் மேல்பட்டையை வெட்டி சேகரித்து ஸ்ரான்லி வீதியில் இருக்கும் சிற்றி ஏஜென்ஸியில் கையளித்து புத்தாண்டுப் பரிசாக கையிருப்பு முடியும்வரை பெற்றுக்கொள்ளுங்கள். முந்துங்கள் அங்கர் கோப்பையை பெற்றிட அருந்துங்கள்

## அங்கர் - ANCHOR

முற்றிலும் ஆடை நீக்காத
செழுமையான பால்

★ பிந்திய செய்தி ★

## ஜோண்ஸ் ஓவர்சீஸ்

லிமிற்றட் ஸ்தாபனத்தார் உங்களுக்கு வழங்கும் இன்னொரு சலுகை அங்கர் தயாரிப்புகளை ஸ்ரான்லி வீதியில் அமைந்திருக்கும் சிற்றி ஏஜென்ஸி ஸ்தாபனத்தாரிடமிருந்து ரூபா 200/- (இருநூறு) க்குள் வாங்கினால் ஒரு மட்பாண்ட அங்கர் கோப்பை முற்றிலும் இலவசம்.

இச்சலுகை கையிருப்பு இருக்கும்வரை மட்டும் என்பதை மறந்துவிடாதீர்கள்.
முந்துங்கள் அங்கர் கோப்பை பெற்றிட

**அருந்துங்கள் அங்கர் பால்மாவை**

அங்கர் ஆடைநீக்காத முழுமைப் பால் என்பதை மறவாதீர்கள்.

விளம்பர அமைப்பு:- ஜோ. எக்கட்டன் செனித் மார்க்கற்றிங் அன் அட்வட்டைசிங் சிஸ்ரம்ஸ், கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம். [A 3379]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

பருமரத்தைப் பற்றிய பல்லியும் பாழ்போகாது.
—தமிழ்ப்பழமொழி

# சுதந்திர போராளிகளுக்கு தமிழர் முழு ஆதரவையும் அளிக்கவேண்டும்

**- கிருஷ்ணா வைகுந்தவாசன்**

லண்டன் டிச. 26
தமிழர்கள் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் இளைஞர்களுக்குத் தமது முழு ஆதரவையும் அளிக்க வேண்டும். கடந்த நூற்றாண்டில் 'ஏகாதிபத்திய வாத ஆட்சிக்கு எதிராக ஆறுமுகநாவலர் போராடினார்' என்று லண்டன் விம்பிள்டன் தமிழ மண்டபத்தில் நடைபெற்ற ஆறுமுகநாவலர் விழாவில் உரையாற்றிய திரு கிருஷ்ணாவைகுந்தவாசன் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில் 57 வருடங்கள் இவ்வுலகில் வாழ்ந்த நாவலர் யாழ்ப்பாணத்தில் பிறந்து வளர்ந்ததுடன் அங்கேயே கல்வியும் கற்றார். அவர் யாழ்ப்பாணத்திலும் சிதம்பரம், திருச்செந்தூர் ஆகிய இடங்களில் இருந்த போதிலும் தமிழ்மக்களின் நலனுக்காகவே தன்னை அர்ப்பணித்தார்.

நாம் அன்னாருக்குச் செய்யும் பெரும் உதவி அவர் வழிநின்ற தமிழ் சுதந்திரப் போராளிகட்கு உதவி அளிப்பதேயாகும். என்றும் தெரிவித்தார்.

இவ்வைபவத்தில் காண்டீடன் வைகுந்தவாசனுல் வரையப்பட்ட ஆறுமுக நாவலரின் முழு அளவிலான உருவச்சிலையும் திரை நீக்கம் செய்யப்பட்டது

சைவ நெறிக்காவலர்-எஸ். சபாபதிப்பிள்ளை, திருமதி வி. முத்துக்குமாரசாமி, வீ ஆர். ராமநாதன் ஆகியோரின் வணக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட இவ்விழாவில் திருமதி அருந்ததி ஸ்ரீரங்கநாதராஜா அவரது மாணவர்கள் ஆகியோரின் இன்னிசைக் கச்சேரியும் நடைபெற்றது. (ஊ - ஒ)

# நமது நோக்கு

## டென்மார்க் இளவரசன் இல்லாத ஹாம்லெட்டா?

சாட்டையில்லாத பம்பரத்தை ஆட்டவல்லாருமுண்டோ? அச்சில்லாமல் தேரோட்டலாமோ? கொட்டிக்கிழங்கு கிண்டி எடுக்கிறவருக்கு கோயிலில் வந்து ஆடத்தெரியுமா?

இவை யாவும் பழைய தமிழரின் நாடோடி வாசகங்கள். எந்த விஞ்ஞான முன்னேற்ற காலத்திலும் இவற்றின் உண்மை பொதுமக்களுக்கு நன்கு புரியும்.

மக்களின் ஆதரவில்லாமல் நாட்டில் சண்டையோ சமாதானமோ உருவெடுக்காது இந்நாட்டுத் தமிழ் மக்களுக்கு நேர்ந்திருக்கும் அதோகதி அகிலஉலகிலும் விளம்பரம் பெற்றிருக்கிறது. இதற்கு நாமனைவரும் 1983ல் நடந்த கலவரத்துக்கு கடமைப்பட்டவர்கள்.

உயிர், உடைமை, மானம், மரியாதை இழந்த போதிலும் தமிழ்ச் சமூகத்திற்கும் அதன் தேசிய உணர்விற்கும் அதனால் கிடைத்த அனுதாபமும் மதிப்பும் எவ்வகையிலும் எந்தவிலைக்கும் விற்க முடியாத பண்டங்கள்.

இதனைப் பிரதிபலித்ததே தமிழ்ப்போராளிகளின் ஆயுதப்போராட்டம்; இதனால் தமிழ்மக்களுக்கு ஏற்பட்ட அழிவு இலகுவில் கணக்கிட முடியாதது. இருப்பினும் சமாதான காலத்தில் ஆராய்ச்சிக் கூர்மையுடன் இது கணக்கிடப்படும். ஆனால் இந்த அழிவை ஏற்றுக்கொண்ட சமூகம், அதன் பலாபலன் என்ன என்பதை மிக விழிப்புடன் அவதானிக்கும். தமிழ் இளைஞர் ஆயுதப் போரில் ஈடுபட்ட வரலாறு இன்று எவருக்கும் திறந்த பாடப்புத்தகமாகிவிட்டது.

இந்தப் போரில் இளைஞர் இயற்றிய சாதனைகள் அரசை உலகில் எந்தெந்த இடங்களுக்கும் என்னென்ன வஞ்சனைத் தந்திரங்களுக்கும் ஏற்றியிறக்கியதை, அரச பத்திரிகைகளை ஊன்றிப் படிப்போர் நன்கறிவர்.

போரைச் சமாளிக்க இயலாத நிலையிலும் சிங்கள பௌத்த ஆட்சியே இந்த நாட்டின் ஆட்சியென்று கொண்ட தன்மை இப்பத்திரிகைகளில் அடிக்கடி காணப்படுகிறது.

இந்திய அரசுடன் பேசி அங்கு புகலிடம் பெறும் தமிழ்ப் பயங்கரவாதிகளை இந்தா கொண்டு வருகிறோமென்று சென்ற இலங்கை 'ஐ ஜீ பீ யும்' (தமிழன்) அவருடைய பரிவாரங்கள் தொடக்கம் இன்று வரைக்கும் இந்தியா சென்ற இலங்கை ஜனாதிபதி, அமைச்சர்கள் சாதாரண தூதர்கள் வரைக்கும் எடுத்த எத்தனங்கள் எதுவும் பலிக்கவில்லை.

இந்தியாவின் நிலைப்பாடு என்ன? மத்தியஸ்தராக, பக்கம் சாராதுசமாதானம் ஏற்படுத்தும் பொறுப்பை தானே ஏற்றுக்கொண்டது.

அதன் நட்பு நாடென்ற நிலையிலும் தமிழர் போராட்டம் நியாயமான சென்ற நிலையிலும் அவர்களின் பாதுகாப்பில் அக்கறை கொண்ட இந்தியா இந்தப்பொறுப்பை என்றும் தட்டிக் கழிக்குமென எவரும் நம்பமுடியாது

எவரென்று நாம் குறிப்பிடுவது இந்தியாவில் புகலிடம் பெற்றிருக்கும் லட்சத்துக்கு மேற்பட்ட தமிழ் அகதிகள் மட்டுமல்ல, இலங்கையிலும், உலகில் வேறந்த நாடுகளிலும் விசனத்துடன் வாழும் தமிழ்ப் பொதுமக்களையே கருதுகின்றோம்

இந்த நாட்டில் தமிழ்மக்கள் மதிப்புடன் வாழவிருக்கிறார்கள்; அதனை மறுக்கும் இலங்கைஅரசு அவர்களுக்கு நீதியை நிராகரித்ததாலேயே போர் தொடங்கியது. போரின் சாதனை அரசை பலபடிகள் பணிய வைத்திருக்கிறது

இதனை நாம் இன்றைய அரசபத்திரிகைகளில் படிக்கமுடியாது தமிழ்ப் பயங்கரவாதிகள் கொல்லப்படுவதும் அவர்களின் ஆயுதங்கள் கைப்பற்றப்படுவதும்தான் அங்கே சொல்லப்படுகின்றன. போரில் வெற்றி என்றால் சமாதானத்துக்கு தில்லுமுல்லு ஏது?

இவ்வித சுத்தப் பொய்யைத் தொடர்ந்து விதைக்கும் ஆட்சியாளர், இந்திய மத்தியஸ்தத்திற்குச் சிரம் தாழ்த்தி வருவது கண்கூடு, அதுவும் அரசியல் நடிப்பு.

கடந்த பங்களூர் மாநாட்டிற்கு முன் இந்தியாவில் வதிந்துவரும் தமிழ்ப் போராளிகள் தலைவருக்கு ஏற்பட்ட குழப்ப நிலையை இலங்கை அரசு தனக்குச் சார்பாகத் தப்புக் கணக்குப் போடுகின்றது.

எனவே, இந்திய மத்தியஸ்தத்தைப் பயன்படுத்தித் தனக்கு வாய்ப்பான ஒரு சமாதானத் தீர்வை உருவாக்கினால் இன்றைய ஆட்சிநீடிக்குமென்றநோக்கு ஒன்று; அதேசமயம் இந்திய தலையீடு தமிழருக்குச் சார்பாகவே இருக்குமென்ற தென்னிலங்கை மக்களின் அச்சத்தைத் தவிர்க்க அதனைப் பெரிசுபடுத்தாதுவிடும் கிகிடுதத்தினம் இன்னொன்று.

இவ்விரண்டிற்கும் இடையே ஊசலாடும் பாதுகாப்பு அமைச்சர் இரு தமிழ்ப் போராளிகளுடன் பேசித் தீர்வுகாணும் ஞானத்துடன் பந்துவிளையாடுகிறார்.

தமிழ் மக்களின் விசுவாசத்தை முற்றாய் இழந்த இன்றைய இலங்கைஅட்சி, எந்தத்தீர்வையும் இந்தியாவின் உத்தரவாதத்துடன் தமிழ்ப் பொதுமக்கள் ஏற்றுக்கொள்ளும் நிலையை தீர்க்கமுடியாது.

போராளிகளுடன் நேரடியாகப் பேச அரசு விரும்புவது மிகநல்லது. கற்பனை கடந்த தியாகத்தை செய்த போராளிகள் 'கிரேக்கரின் கொடைகள் போல்', 'ரிரேயின் மரக்குதிரை போல' ஏமாற்றுவித்தைகளில் ஈடுபடமாட்டாரென்பது திண்ணம்.

# வடக்கிலும் மூளை அளற்சிக் காய்ச்சல் பரவும் அபாயம்

### யாழ் பிராந்திய சுகாதார திணைக்களம் எச்சரிக்கை

யாழ்ப்பாணம் சனி.

அனுராதபுரம், சிலாபம் ஆகிய மாவட்டங்களில் கடந்த வருடப் பிற்பகுதியில் பரவி 83 பேரைப் பலியெடுத்தும், சுமார் 500 பேருக்கு மேற்பட்டோருக்குப் பாதிப்பை ஏற்படுத்தியதுமான மூளை அளற்சிக் காய்ச்சல் தற்போது கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம் மாவட்டங்களிலும் காணப்படுகிறது. யாழ மாவட்டத்தில் கைதடி, வரணி, மண்கும்பான் வேலணை, அரியாலை ஆகிய பகுதிகளில் இந்நோயினால் பலர் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. கடந்த இருவாரங்களில் மாத்திரம் இ மூளை அளற்சிக்காய்ச்சல் காரணமாக 17பேர் யாழ். அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என யாழ். பிராந்திய சுகாதாரத் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையொன்று கூறுகிறது.

அவ்வறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

வெளிக்களங்களில் மேற்கொண்ட பரிசோதனையின் போது இந்நோய்க்கு ஏதுவான ஜே ஈ, வைரஸ் கிருமியைப் பரப்பும் குயிலிசின் நுளம்புக்குடம்பிகளை வயல்வெளிகளில், தோட்டங்களில் தேங்கி நிற்கும் நீரில் காணமுடிந்தது. அத்துடன் இவ்வைரஸ் கிருமிகளன்றி, ஆடு மாடுகளில் கூடுதலாகப் பெருகும் தன்மையும் காணக்கூடியதாகவுள்ளது.

எமது பகுதியில் வடகீழ்ப் பருவப்பெயர்ச்சிக் காற்றுடன் ஏற்படும் பெருமழை காரணமாக இந்நுளம்பு கூடுதலாக உண்டாகும் நிலைமை ஏற்படுகிறது. பல நோயாளர்கள் இருப்பதும், இந்நுளப்பு கூடுதலாக அதிகரிப்பதும், ஆடு, மாடு பன்றி முதலிய பிராணிகளை எதுவித கட்டுப்பாடுமில்லாமல் வளர்ப்பதும் மூளை அளர்ச்சிக் காய்ச்சல் பெருமளவில் பெருகும் ஆபத்தை உணர்த்துகின்றது, மேலும் குடாநாட்டுக்குள் அழுக்கு நீர் தேங்கி நிற்கும் இடங்களாகிய வாய்க்கால்கள் சல அடைப்பு மலகூடக்குழிகள் ஏனைய பழைய பாத்திரங்களில் மழை நீர் தேங்கி நிற்பதனால் இந்நுளம்பு உண்டாகக்கூடிய வாய்ப்பு இருக்கிறது

### நோய் அறிகுறிகள்

காய்ச்சல், கடுமையான தலையிடி, வாந்தி முதலியன ஆரம்ப அறிகுறிகளாகும். மேலும் கூடுதலாகப் பாதிப்புக்குள்ளானோர்களில் மயக்கமுறல், வலிப்பு போன்ற குணங்குறிகளையும் அவதானிக்க முடியும். ஆரம்பத்தில் சிறுவர் மத்தியில் இந்நோய் காணப்பட்டபோதிலும் தற்போது வளர்ந்தோர்களிலும் இக்காய்ச்சல் உண்டாகும் தன்மையைக் காணமுடிகிறது.

### சிகிச்சை

ஆரம்ப அறிகுறிகள் மக்கள் மத்தியில் காணப்படும்போது அண்மையிலுள்ள வைத்திய நிலையங்களில் சிகிச்சை பெறுமாறு பொதுமக்கள் கேட்கப்படுகின்றார்கள்.

### தடைமுறை விபரங்கள்

நோய் பற்றிய தகவல் அறிந்

(5-ம் பக்கம் பார்க்க)

## தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் இளைஞர் எழுச்சிநிகழ்ச்சிகள்

ஒரு நாட்டின் விலைமதிக்க முடியாத வளமாக அந்நாட்டின் இளம் சமுதாயத்தினர் விளங்குகின்றனர் எம் நாட்டு இளம் சமுதாயத்தினரின் சமூக, பொருளாதார மேம்பாடுகளுக்காக ஊக்குவிக்க, தேசிய அபிவிருத்தி நடவடிக்கைகளில் பங்குகொள்ளச் செய்ய பயிற்றுவிக்க, கட்சி, அரசியல் கொள்கைகளில் விடுபட்டு அரச தரத்திலான உரிய தாபனமொன்று இல்லாமையே என உணரப்பட்டதனால் 1969-ம் ஆண்டு 11-ம் இலக்க தன்னிச்சை இளைஞர் சேவைகள் சட்டத்தின்மூலம் தேசிய இளைஞர் சேவை மன்றம் உருவாக்கப்பட்டது.

இதன்மூலம் இளம் சமுதாயத்தினரிடையே தேசிய விழிப்புணர்வுக்கு வழிவகுக்கப்பட்டதுடன் பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகள். தேசிய அபிவிருத்தித் திட்டங்களில் இளைஞர்களைப் பங்குகொள்ளச் செய்தல், தேசிய சர்வதேச ரீதியாக இளம் சமுதாயத்தினரிடையே ஒற்றுமையை வளர்க்கச் செயதல், அவர்களது சமூக, பொருளாதார, கலை, கலாசார விளையாட்டுத்துறை நடவடிக்கைகள் என்னவற்றை மேம்படச் செய்தல் என்பவற்றிற்காகவும் இளைஞர் விவகார வேலைவாய்ப்புத்துறை அமைச்சின்கீழ் தேசிய இளைஞர்சேவை மன்றம் இயங்கிவருகிறது

எம்நாட்டில் 17-29 வயதிற்கிடைப்பட்ட 5 இலட்சத்திற்கு அதிகமான இளம் சமுதாயத்தினர் தேசிய இளைஞர் சேவை மன்றத்தில் பலதரப்பட்ட நிகழ்ச்சிகளுடன் தொடர்புபட்டுள்ளனர் இவர்கள் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மூலம் கிடைக்கும் சேவைகளை மேலும் பயனுள்ளதாக்கும் வகையில் இன, மத, மொழி, அரசியல் வேறுபாடு இன்றி இந்நிகழ்ச்சித் திட்டம் சகல இளம் சமுதாயத்தினரது ஒத்துழைப்புடன் நாடளாவிய ரீதியில் 1987 ஜனவரி மாதத்தில் யொவுன் நவோதயம் (இளைஞர் புத்தெழுச்சி) என்னும் நிகழ்ச்சித் திட்டத்தினை இளைஞர் கழக சம்மேளனம் கொண்டாடத் திட்டமிட்டுள்ளது. பாடசாலைகள், உயர் கல்வி நிலையங்கள், அரசு சார்பற்ற நிறுவனங்கள் பாடசாலைகளை விட்டுச்சென்ற இளைஞர் யுவதிகளைப் போன்ற சகல பிரிவினர்களுக்கும் இதில் பங்கு கொள்ளும் வாய்ப்பு உண்டு.

இளைஞர்சழகங்களில் அங்கத்தவர்களாக உள்ள ஒரு இலட்சத்திற்கு அதிகமாக உள்ள இளைஞர் யுவதிகளினால் சமூக ஆய்வு நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட உள்ளது இதனூடாக நோய்த்தடுப்பு முறைகள், கிராம எழுச்சித் திட்டம், சர்வதேச வீடமைப்பு ஆண்டு, வெகுசன தொடர்பு சாதனங்களினால் கிராமியரீதியில் ஏற்பட்டுள்ள தாக்கங்கள் இளம் சமுதாயத்தினரில் சமய வழிபாடுகள் போன்ற பல தரப்பட்ட துறைகள் தொடர்பாக இவ் ஆய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

அத்தோடு தேசிய சமய பொது வைபவங்கள் இம் மாதத்தினுள் இடம்பெறும் தினங்களில் விசேட விழாக்கள் கொண்டாடுதல் எம் நாட்டில் இளைஞர் சேவை ஆரம்பிக்கப்பட்டு 20ம் ஆண்டு பூர்த்திவிழா கொண்டாடப்படும் 1987ம் ஆண்டு ஆரம்பத்திலேயே இளைஞர் மத்தியில் புத்துணர்வை ஏற்படுத்துதல், பெரும் ஒத்துழைப்பாக அமையும் என தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் கருதுகின்றது.

தேசிய இளைஞர் விருதுவழங்கும் போட்டிகள், தேசிய சேவைத்திட்டங்கள், தொழில் பயிற்சிகள், நிஸ்கோ கூட்டுறவு சுயதொழில்வாய்ப்புகள், தேசிய சர்வதேச இளைஞர் பரிமாற்றத் திட்டங்கள், இளைஞர் சேவை விளையாட்டு, கலாசார குழுக்கள், இளைஞர் பரிசளிப்பு வைபவங்கள், பல்கலைக்கழக இளைஞர் நடவடிக்கை போன்ற பலதரப்பட்ட துறைகள் ஊடாக இளம் சமுதாயத்தினரின் தனித் திறமைகளை வளர்ப்பதற்கும் இந் நாட்டு இளம் சமுதாயத்தினரிடையே அந்நியோன்னிய சமூக உறவு ஏற்படுவதன் மூலம் எம் நாட்டில் சமாதானமும், ஐக்கியமும் நிலவும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

— ச. அன்ரனிசாமி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவறிவிட்டது

வீரவாகு சிவசுப்பிரமணியம் அராலி தெற்கு, வட்டுக்கோட்டையில் வசிக்கும் எனது அடையாள அட்டை 25-12-86ல் யாழ் நகரில் ஸ்ரீதர் சினிமாவிற்கும் காங்கேசன்துறை வீதிக்குமிடையில் தவறிவிட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் கீழ்க் கண்ட முகவரிக்கு கொடுக்கவும். சன்மானம் வழங்கப்படும். முகவரி:- பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 257, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (C-6577)

கிரிக்கெட்:

## இன்று 2-வது டெஸ்ட் போட்டி

புதுடில்லி, டிச 27

இந்திய - இலங்கை கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான 2-வது கிரிக்கெட் டெஸ்ட் போட்டி இன்று நாக்பூரில் ஆரம்பமாகிறது.

இப்போட்டியில் இந்திய அணியின் சார்பில் மொஹிந்தர் அமர்நாத், சந்திரகாந்த் பண்டிட்டுக்கு பதிலாக விளையாடுவார். (சி)

இலங்கையின் முதல் ஒடியோ கிளப்

# இலவச அங்கத்துவம்

நியூ விக்ரேஸ் ஓடியோ கிளப் அங்கத்தவராவதற்கு அறிமுகம் வைப்புப் பணம் வேண்டியதில்லை.

இன்றே அங்கத்துவம் பெற்றுப் பின்வரும் பாடல்களை ஒறிஜினல் மக்சல் கசற்றில் கேட்டு மகிழுங்கள்:

- ★ பக்திப் பாடல்கள்,
- ★ புதிய பழைய சினிமாப் பாடல்கள்,
- ★ நாதஸ்வர, வாத்திய இசைகள்,
- ★ பிறந்த நாள், திருமணப் பாடல்கள்,
- ★ தத்துவ, சோகப் பாடல்கள்,
- ★ டிஸ்கோ, ஆங்கில, இந்திப் பாடல்கள்,
- ★ கதை வசனங்கள்,

வேண்டிய கசற்றை வேண்டிய நாட்களுக்கு கேட்டு ரசித்தபின் வாடகைக்கு ஒரு கசற்றுக்கு ஒரு நாளைக்கு ரூபா 2/- மட்டுமே.

பாடல்கள் பதித்த ஒறிஜினல் மக்சல் கசற் விலை ரூபா 29 50.

மேலதிக விபரங்களுக்கு நேரில்:

நியூ விக்ரேஸ் ஒடியோ கிளப்

23, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 23532 [A3274]

இலங்கையில் முதல் ஒடியோ கிளப் ஆரம்பித்த ஒரு வருட நிறைவை முன்னிட்டு

நியூ விக்ரேஸ்

நத்தார், புதுவருட

# மலிவு விற்பனை

★ சிறுவர்களுக்கு ஏற்ற விளையாட்டுப் பொருட்கள் (ரூபா 15/- முதல் 200/- வரை)

★ பாடல்கள் பதித்த ஒடியோ C 60 மக்சல் கசற் (ரூபா 29/50)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (புதிய சினிமாப் பாடல்கள் | ஒலி | 1 | முதல் | 90) |
| (பழைய | ,, | ,, | 1 | ,, | 69) |
| (பக்திப் பாடல்கள் | | ,, | 1 | ,, | 53) |
| (கதைவசனங்கள் | | ,, | 1 | ,, | 30) |

நாதஸ்வரக்கச்சேரிகள், நகைச்சுவைகள் இன்னும் பல

முடிவு:- 1 - 1 - 87

நியூ விக்ரேஸ்

23, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி-: 23532

[A 3273]

"யாழ். உதைபந்தாட்ட லீக்"

# நிர்வாகத்தில் சீர்கேடு பல கழகங்கள் வெளியேற்றம்

யாழ்ப்பாணம், சனி

'யாழ் உதைபந்தாட்ட லீக்'கின் நிர்வாகத்தில் பெரும் குளறுபடி ஏற்பட்டுள்ளதாக விளையாட்டுக் கழகங்கள் பல இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்துக்கு, கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளன.

அடுத்தமாத இறுதியில், மேற்படி லீக்கின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நடைபெற இருப்பதினாலேயே இவ்விதமான நிர்வாக சீர்கேடுகள் நிலவுவதாகத் தெரிய வருகிறது.

'யாழ் லீக்கின் நிர்வாக சீர்கேடுகளை கடந்த காலங்களில் எடுத்துக்கூறிய பல விளையாட்டுக் கழகங்களை, சில சாக்குப் போக்குகள் கூறி, அதன் அங்கத்துவத்தில் தமையை இழக்கச் செய்தது மட்டுமன்றி, எதிர்வரும் பொதுக் கூட்டத்துக்கு வாக்களிக்கும் உரிமைகளையும் பறித்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

'யாழ். உதைபந்தாட்ட லீக்'கின் தற்போதைய காரியதரிசியான திரு. எம். தேவதாஸை அவரின் சொந்தக் கழகமான 'வைக்கிங்ஸ்' கழகம் அவர்மேல் நடவடிக்கை எடுத்து, இரு வருடங்களுக்கு அவரைக் கழகத்திலிருந்து விலக்கி வைத்துள்ளது.

யாழ் உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கமும், தமது பிரதிநிதியான திரு. சற். சிங்கராயர் மீதும், இடைக்கால தடைஉத்தரவை பிறப்பித்துள்ளதாகத் தெரியவருகிறது.

'யாழ் உதைபந்தாட்ட லீக்'கின் முன்னாள் காரியதரிசியும், தற்போதைய யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத் தலைவருமான திரு. ஈ. கே. குமரையா இதுபற்றி கருத்துத் தெரிவிக்கையில், 'தனிப்பட்ட ஒரு சிலருக்கிடையில் ஏற்பட்ட பகைமை காரணமாகவே 'யாழ் உதைபந்தாட்ட லீக்'கின் நிர்வாகத்தில், மேற்படி சீர்கேடுகள் ஏற்பட்டுள்ளதாகத்' தெரிவித்தார். (வி)

## உலக சமய தினம்

வவுனியா, சனி

வவுனியாவில் உலக சமய தின விழாவினை கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக வவுனியா அரசாங்க அதிபர் திரு. கே. வி லோகேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார்.

இவ்விழாவில் சகல சமய பிரமுகர்களும் உரையாற்றுவார்கள்.

## இடமாற்றம்

பண்டத்தரிப்பு, சனி

யாழ். அபிவிருத்திச்சபையின் பண்டத்தரிப்பு கிராம உப அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு ந. குமாரசாமி எதிர் வரும் ஜனவரி மாதம் தொடக்கம் வட்டுக்கோட்டை கிராம உப அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இவரின் இடத்திற்கு சங்கானை பட்டின உப அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. எம். பரமநாதன் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (ஒ)

## பூநகரி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனையிறவு இராணுவ முகாமில் இடம்பெறும் கடும் சோதனைக்கு அஞ்சி ஊரத்திரபுரம் பூநகரி வீதி வழியாக பயணம் மேற்கொள்ளும் பிரயாணிகள் மீது வாடியடி இராணுவமும் கடந்த சில தினங்களாக மிகக் கடுமையான சோதனைகளை மேற்கொள்ள ஆரம்பித்துள்ளனர்.

பிரயாணிகள் கொண்டு வரும் பொருட்கள் மீது கடுமையான சோதனை மேற்கொள்ளும் இராணுவத்தினரின் நடவடிக்கையால் போக்குவரத்து பயணி நேர தாமதம் ஏற்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## வடக்கிலும்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

திருப்பின் முழுவிபரங்களையும் உங்கள் பகுதிப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர், சுகாதார வைத்திய அதிகாரியின் கவனத்திற்குக் கொண்டுவருதல் மிகவும் அவசியம். அதன்மூலம் வேண்டிய தடுப்பு நடவடிக்கைகளை ஏற்படுத்த உதவியாக இருக்கும்.

கட்டுப்பாடான முறையில் பன்றி ஆடு, மாடு முதலியனவற்றை அதற்குரிய தொழுவங்களில் வளர்த்தல் வேண்டு.

சலஅடைப்பு மலகூடங்களுடன் தொடர்பான கிடங்குகள் பூரணமாக மூடப்பட்டிருத்தல வேண்டும், குளியில் வெடிப்பு ஏற்பட்டிருத்தல், இம்மலகூடக்குழியில் துவாரம் அமைத்துப் பைப்பொருத்தியிருத்தல் முதலியன நுளம்பு தலாக உண்டாகும் தன்மைகளாக அமைகின்றன. எனவே சலஅடைப்பு மலகூடக்குழிகளை வெளிச்சம் காற்று உட்செல்லா அளவிற்குப் பூரணமா மூடியிருத்தல் வேண்டும். இவ்விதம் செய்வதின் மூலம் கணிசமான அளவிற்குக் குடாநாட்டிலுள்ள நுளம்புத்தொல்லையைக் கட்டுப்படுத்தமுடியும்.

நுளம்பு கூடுதலாகக் காணப்படும் இடங்களில் மக்கள் நுளம்புவலைகளை பயன்படுத்திப் படுக்கப் பழக்கிக்கொள்ளல் வேண்டும்.

## செட்டிகுளம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

போது இப்பகுதி மக்கள் வீடு வாசல்களை இழந்து அகதிகளாயினர். இவர்களுக்கான நிவாரண உதவிகள் பலகாலமாக வழங்கப்படவில்லை இதனால் இவர்கள் பெரும் பாதிப்புக்களுக்குள்ளாகி யிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர்களுக்கான எட்டரை லட்சம் ரூபா நிவாரணப்பணம் இன்னும் ஒரு சில தினங்களில் வழங்கப்பட்டு விடும் என்று அறிவிக்கப்பட்டது.

## பெப்ரவரி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ரவரி மாத முற் பகுதியில் வெளியிடப்படுமென தெரிவிக்கப்படுகின்றது.

பரீட்சை விடைத்தாள்கள் திருத்தும் வேலைகள் நேற்று நாடெங்கிலுமுள்ள 66 நிலையங்களில் ஆரம்பமாகியுள்ளன இம் முறை வடக்கு, கிழக்குப் பகுதிகளில் விடைத்தாள்கள் திருத்தும் வேலைகள் இடம்பெறவில்லை. என்பது குறிப்பிடத்தக்கது.

## டக்ளஸ்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

சென்னைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்த இவர், நேற்று முன்தினம் பிணையில் விடுதலையானார்.

இவருடன் ஈ. பி. ஆர். எல் எவ் வைச் சேர்ந்த வேறு ஆறு பேரும் பொலிஸ் பாதுகாப்பிலிருந்து பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு மாதத்துக்கு முன்னர் சென்னை சூளை மேட்டுப்பகுதியில் இடம்பெற்ற சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் கொலைப்பட்டார். பலர் காயமடைந்திருந்தனர். இச்சம்பவத்துக்கு ஈ பி ஆர். எல் எவ் இயக்கமே பொறுப்பாகும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. தெரிந்ததே.

## முள்ளியவளை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளனர்.

முள்ளியவளை மூன்றும் சந்தியில் நண்பகல் சுமார் ஒரு மணியளவில் ரோந்து செல்ல முயன்ற இராணுவத்தினரை எதிர்கொண்ட விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்திற்குமிடையில் சுமார் 20 நிமிடம் பலத்த மோதல் இடம்பெற்றது.

விடுதலைப்புலிகளின் பலத்த எதிர்த்தாக்குதலைத் தொடர்ந்து இராணுவம் பின்வாங்கியதாகவும் இதன்போது இராணுவ தரப்பில் ஏற்பட்ட சேதம் பற்றிய விபரம் தெரியவில்லையென்றும் தமது தரப்பில் எதுவிதசேதமும் இல்லை என்றும் விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர். (சி)

## ஷெல்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யில் நேற்று இராணுவத்தினருக்கும் போராளிகளுக்குமிடையில் பலத்த மோதல் நடைபெற்றுக் கொண்டிருந்ததை தொடர்ந்தே இந்த லொறி பாதுகாப்பான பாதை ஒன்றின் வழியாக வந்து கொண்டிருந்தபோது இச்சம்பவம் இடம்பெற்றது எனத் தெரிவிக்கப்பட்டது. (சி)

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது

லிடோ திரையில்

10-30, 2-30, 6-30

சுரேஷ் ரேவதி கவுண்டமணி மனோரமா நடித்த

ஆகாயத் தாமரைகள்

[புதிய வெளியீடு கலர்]

Suitable For Adults

புதிய வெளியீடு

வெலிங்டன் திரையில்

10-30 2-30 4 30 6 30

WILLIAM KATT

SEAN YOUNG

IN VAVY

[Action Colour]

## பதவி வெற்றிடம்

(1) வரி உத்தியோகத்தர் [Tax Officer]

(2) சவர்க்கார தொழிற்சாலைக்கு பொது முகாமையாளர் (General Manager)

மேற்படி பதவிகளுக்கு தகைமையும் அனுபவமும் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தகுந்த சம்பளம் வழங்கப்படும்

விண்ணப்பமுடிவு திகதி 10 01-87

உங்கள் விண்ணப்பங்களை

புலிகளின் குரல் செய்திப் பலகையில் உள்ள ஆலோசனைப் பெட்டிகளில் சேர்க்கவும். (C6584

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரயாண ஒழுங்குகள்

★ லிபியா:-

ஒயில் கொம்பனி லேபறேஸ் 1987-ம் வருடம் 16-ம் திகதிக்கு மேல் பயணம் தொடங்குகின்றது. 200 வேலையாட்கள் தேவை. செல்ல விரும்புவோர் வேண்டிய ஆவணங்களை எம்மிடம் சமர்ப்பிக்கவும்.

★ சவுதி அரேபியா:-

கிளீனேஸ் – 25 வயது முடிந்தவர்கள்மட்டுமே எடுக்கப்படுவார்கள். 200 பேர் தேவை. உடன் வந்து சந்திக்கவும்.

★ குவைத்:-

பணிப் பெண்கள் – 18 வயதுக்கும் 25 வயதிற்கும் இடைப்பட்டவர்கள் உடன் நேரில் வரவும்.

★ டுபாய்:-

பணிப்பெண் ள் – 18 வயதுக்கும் 25 வயதிற்கும் இடைப்பட்டவர்கள் மட்டும்.

★ குவைத்:-

ஹவுஸ் றைவேஸ் - வயது 18—35 வரை.

மேற்குறிப்பிட்ட நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகள் செய்து தரப்படும். சகலரும் நேரில் வந்து தொடர்புகொள்ளவும்.

**டாக்டர் கே. எஸ் பரம்சோதிநாதர்,**
பிரசாந்தி வைத்திய நிலையம்,
கற்பகப்பிள்ளையார் கோவிலடி,
உடுவில் கிழக்கு, உடுவில்.

பி. கு: இணுவில் ஆஸ்பத்திரிக்கு முன்னால் உள்ள நியூ விமலம் சலூன் ஒழுங்கையால் வரவும்.

(A-3262)

## பிரயாண ஒழுங்கு

'யூனிவேர்சல் ஏஜென்சி'
ஸ்தாபனத்தாரின்

### பணிவானவேண்டுகோள்

இவ்வருட முடிவில் எமது வரவு செலவுக் கணக்கைப் பூர்த்தி செய்யத் தீர்மானித்திருக்கிறோம்.

அதையிட்டு எமது காரியாலயத்திலும், எமது உப-ஏஜென்சியுடனும் கொடுக்கல் வாங்கல் தொடர்பு கொண்ட அனைவரும் இம்மாத முடிவுக்குள் நீங்கள் தொடர்புகொண்ட விடயம் பற்றியும், உங்கள் கொடுக்கல் வாங்கல் பற்றிய விபரத்தையும், எமது காரியாலயத்திற்கு வந்து தெரிவிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

எமது ஸ்தாபனத்திடம் கடன் பெற்றுச் சென்றோரின் பொறுப்பாளர்களும் தவறாது வந்து தொடர்பு கொள்ளும்படி தயவாகக் கேட்டுக்கொள்கிறோம்.

மேலும் 1987ம் ஆண்டு ஜனவரி மாதத்திற்கான எமது பிரயாண ஒழுங்குகளின் விபரம்:

★ லிபியா

ஒயில் கம்பனி வேலையாட்கள்
(150 வெற்றிடங்கள்)

★ சவுதி அரேபியா

கிளீனேர்ஸ் OPEN VISA வயது 26-40
[160 வெற்றிடங்கள்]

★ குவைத்

ஏற்கனவே எம்முடன் தொடர்புகொண்டவர்களுக்கு மட்டும்.

பிரயாண ஒழுங்குகள் செய்யப்படவுள்ளன என்பதையும் அறியத்தருகின்றோம்.

அத்துடன்
பாஸ்போட், பொண்ட், ரிக்கற்றிங் என்பனவும் உடனுக்குடன் செய்து கொடுக்கப்படும்.

**இத்துடன் நத்தார், புதுவருட வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்,**

**Universal Agencies**
**(யூனிவேர்சல் ஏஜென்சி)**
125, [455] ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(ஆயுர்வேதக் கல்லூரிக்கு அருகாமையில்- பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு) முன்பாக

(A 3265)

## இன்றைய பலன்

மாதம்:- மார்கழி
திகதி:- 12) 27-12-86
கிழமை: சனி
திதி:- துவாதசி
நடசத்திரம்:- சுவ தி

மேடம்: சனஸ்திரவழியால் நன்மைகள் கிட்டும் கடமையிலும் ஆதரவு பெருகும் உவகை தரும் சம்பவங்களும் நடம்பெறும்.

இடபம்: அதிகாரப்போதையில் தவறுகள் நடக்கலாம். வேண்டாத நடவடிக்கைகளைத் தவிர்த்து நடக்கவும். சிறுவிபத்தும் ஏற்படலாம்

மிதுனம்: பெரிய இடத்துச் சிநேகம் ஏற்படலாம் புண்ணிய காரியங்களில் ஆர்வம் பிறக்கும். தன்மான வாழ்வும் சேரும்

கடகம்: அறிவுப்பசிக்குஇன்று தாராளமாக உணவு கிடைக்கும் குடும்பவழியால் மனதுக்கு நிம்மதிபிறக்கும் நினைத்த காரியச் சித்தியும் கிட்டும்,

சிங்கம்: முதலீடுசெய்வதற்கு உகந்த தினம் நீண்ட நாள் கோரிக்கை இன்று நிவர்த்தியாகும். முன்னேற்றமான வாழ்வுமுண்டாம்.

கன்னி. அதிகநித்திரை உடல் நலத்தைக் கெடுக்கும். வினை பொருள் நஷ்டமுண்டு. பண மோசடியும் நடக்கலாம். அவதானம் வேண்டும்.

துலாம்: ஆணவப் போக்கினால் அடிசறுக்க நேரிடும். குடும்பத்திலும் பூசல்கள் தோன்றியறையும், பொருளும் நழுவக்கூடும்.

விருச்சுகம்: தன்மானவாழ்வுமுண்டு நல்லதொழில் சிறப்புமுண்டு உயர் கல்வி நாட்டமுமுண்டு.

தனுசு: மனப் போராட்டம் அதிகரிக்கும் அவப் பெயர் கேட்கவும நேரிடலாம். தொழிலிலும் விழிப்புடனிருக்கவும.

மகரம்: ஆராய்ச்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். மாதுருவழியாலும் மகிழ்ச்சிக்கிடமுண்டு. செய் தொழில் விருத்தியுண்டு.

கும்பம்: பண விவகாரம் முடிவு பெறும். பந்த பாசம் பரசவப்படுத்தும். தொழில மகிழ்ச்சியுண்டு.

மீனம்: கண்களில் கனல் தெறிக்கும். புகழும்குன்றும் அன்னிய வாசமுமுண்டு.

திருமலை வே ரவீந்திரன்

## முதலாவது பிறந்ததின வாழ்த்து



**செல்வன் சத்தியபாலன் விஜித்தன்**

சுன்னாகம் கிழக்கைச் சேர்ந்த சத்தியபாலன் ரஞ்ஜினிதேவி தம்பதிகளின அருமைப் புதல்வன் செல்வன் விஜித்தன் இன்று 27-12 86ல் தனது முதலாவது பிறந்ததினத்தைக் கொண்டாடுகிறார். இவரை டடா, அம்மா, பாட்டா, டடாம்மா, தாத்தா, அம்மம்மா, மாமாமார், மாமிமார், சித்தி, பூட்டியப்மா ஆகியோர் பல்கலையும் கற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

(C 6534)

## பேராதனைப் பல்கலைக்கழக

(வெளிவாரி)
பட்டப்படிப்புகள் (1987 டிசம்பர்)

★ கலைமாணி—B. A.
★ விஞ்ஞானமாணி- —B. Sc.

விரிவுரைகள் 11 - 1 - 1987-ல் ஆரம்பமாகின்றன.

1986 மார்ச் பரீட்சைக்கு தோற்றி முடிவுகளை எதிர்பார்த்திருக்கும் பரீட்சார்த்திகளும் விண்ணப்பிக்கலாம்.

விபரங்களுக்கு:

உதவிப்பதிவாளர்,
பட்டப்படிப்புகள் கல்லூரி,
148/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

குறிப்பு: பரீட்சை முடிவுகள் வெளிவர தாமதமாகின்ற காரணத்தால் பாடத்திட்டத்தினை பூர்த்தியாக்க வேண்டியதன் காரணமாகவே மேற்படி விரிவுரைகள் ஆரம்பமாகின்றன என்பதனை பரீட்சார்த்திகளுக்கு அறியத்தருகின்றோம்.

C-6556

## அறிவித்தல்

சாரதா புத்தகசாலை என்னும் பெயரில் இயங்கி வந்த ஸ்தாபனம் நிருபா ரேடர் NIRUPA TRADER என இயங்கிவருகின்றதென்பதை வாடிக்கையாளர்கள் மற்றும் ஸ்தாபனங்களுக்கு தெரிவித்துக்கொள்கிறோம்.

★ நிருபா ரேடர் ★

**NIRUPA TRADER**

★ பாடசாலை புத்தகங்கள் உபகரணங்கள் மற்றும்
★ உள்நாட்டு, வெளிநாட்டு சஞ்சிகைகள்
★ கலண்டர். டயறி வகைகள்
★ வாழ்த்து மடல்கள் அனைத்தையும்

மலிவு விலையில்பெற இன்றே நாடுங்கள்:

**நிருபா ரேடர்**
2, பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.

(A 3272)

## பிரயாண ஒழுங்குகள்

★ Canada ★ London
★ Germany ★ Norway
★ மத்தியகிழக்கு ★ மாலைதீவு

ஆகிய நாடுகளுக்கு எமது முகவர் ம. சண்முகரட்ணம் அழைத்துச் செல்வார்.

பாஸ்போட், பொண்ட் இருகிழமைகளில் செய்துகொடுக்கப்படும.

உடன் தொடர்புகொள்ளுங்கள்:-

**ம. சண்முகரட்ணம்**
சிவன்கோவில் வீதி,
சித்தன்கேணி.

(C-6564)

## யானை மார்க் குளிர்பானங்கள்

யானை மார்க் குளிர்பான பாவனையாளர்களுக்கும் விற்பனையாளர்களுக்கும், ஓர் நற்செய்தி. 'சுவர்ணாஸ்' புலோலி சினிமா கட்டிடம், பருத்தித்துறை ஆகிய நாங்கள் வடமராட்சிப் பகுதிக்கும், மற்றும் அச்சுவேலிப் பகுதிக்கும் ஏக விநியோகஸ்தர்களாக சிலோன் கோல்ட் ஸ்ரோர்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தால் நியமிக்கப்பட்டுள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரியத் தருகின்றோம்.

தங்கள் ஆதரவை நாடும்:

உரிமையாளர்
சு. வே. சிவானந்தன்,
**"சுவர்ணாஸ்"**
புலோலி சினிமா கட்டிடம்,
பருத்தித்துறை.

(C 6404)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். நகரில்

இதோ! அறிமுகப்படுத்துகின்றோம்

அங்கர் குறூப் தயாரிப்பான அங்கர் குளிர்பானங்களை கொழும்பு குளிர்பானங்களுக்கு மேலாக எமது மண்ணின் பாரம்பரிய உற்பத்தி அங்கர் குளிர் பானங்களை எங்கள் மண்ணில் குளிர்பானங்கள் தயாரிக்க முடியும் என நிரூபித்துள்ளார்கள் அங்கர் குறூப் ஸ்தாபனத்தார்.

தித்திக்கும் 7 வகைகளில் இப்போது நகரில் தாராளமாக கிடைக்கின்றது அங்கர் குளிர்பானங்கள்

ஒரேஞ்பார்லி, நெக்டோ, ஜிஞ்சர் பியர், பிளேன் சோடா, லெமன் கிறஸ், ஒரேஞ் ரஸ், பைன் அப்பிள்.

சுவைத்து மகிழ்ந்திட 7 வகைகள் என்றும் உள்ளூர் உற்பத்தி பொருட்களுக்கு சிறந்ததையே சந்தையில் அறிமுகப்படுத்தி வரும் ஜோ எகட்டனின் விநியோகத்தில் சந்தைப்படுத்தப் படுகின்றது. அங்கர் குறூப் குளிர் பானங்கள் உங்கள் பண்டிகைக் காலங்களில் விருந்தினருக்கு பரிமாறிட நீங்களும் எமது உள்ளூர் வியாபார நிலையங்களில் வற்புறுத்திக் கேளுங்கள்.

### அங்கர் குளிர்பானங்கள்

வியாபார விசாரணைகளுக்கு

### ஜோ. எகட்டன்

செனித் மார்கட்டிங் அன்ட அட்வடைசிங் சிஸ்டம்ஸ்

இல. 19/3 கொழும்புத்துறைவீதி,
(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை,)
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

உள்ளூர் உற்பத்தி பொருட்களுக்கு ஆதரவு தாரீர்

A-3381



உங்கள் உற்பத்தி பொருட்களுக்கு கவர்ச்சி விளம்பரங்கள் மூலம் வாடிக்கையாளருக்குத் தெரியப்படுத்துங்கள்.

நாம் உற்பத்தியாளருக்கு பொருட்களை சந்தைப் படுத்துவதற்கு துரித விளம்பரங்கள் மூலம் உதவுகின்றோம். இன்று நேற்றல்ல வியாபாரத்துறையிலும் விளம்பரத்துறையிலும் 20 வருடகால அனுபவம் பெற்ற ஜோ எகட்டனின் நேரடி மேற்பார்வையில் இயங்குகின்றது.

### செனித் மார்க்கட்டிங் அன்ட் அட்வடைசிங் சிஸ்டம்ஸ்

அடுத்த உங்கள் விளம்பர விற்பனைத் தேவைகளுக்கும் விளம்பரத் தேவைகளுக்கும் எங்களை நாடுங்கள்: நாங்கள் உங்களுக்கு இலவச ஆலோசனைகளை வழங்கி எங்கள் மண்ணில் உள்ளூர் உற்பத்தி பொருட்களுக்கு முன்னேற்றப்பாதையில் இட்டுச் செல்கின்றோம்: ஆகவே எம்மை நேரில் அணுகுங்கள்.

### ஜோ. எகட்டன்

செனித் மார்கட்டிங் அன்ட் அட்வடைசிங் சிஸ்டம்ஸ்

இல. 19/3, கொழும்புத்துறை வீதி.
(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை,)
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

[A-3384]


## அனைத்திந்திய தமிழ் எழுத்தாளர் சங்கம்

சென்னை, டிச-26

அனைத்திந்திய தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் பொதுக் கூட்டம் அண்மையில் சென்னையில் நடைபெற்றபோது சங்கத்தின் நிர்வாக சபை உறுப்பினர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:-

தலைவர்: திரு. விக்கிரமன், துணைத் தலைவர் திருவாளர்கள்: திரு. வா. மு. சேதுராமன். திரு. கோ. வி. மணிசேகரன், திரு அன்புவேதாசச்சலம், பொதுச் செயலாளர்: திரு வாசவன்.


## நவீன அணுகுமுறையில் தயாரிக்கப்பட்ட சக்தி வாய்ந்த

### திரவ கெந்தகம் (சல்பர்)

# சுப்பர் சிக்ஸ்




அங்லோ-ஏசியன் பேர்டிலைசர்ஸ் லிமிட்டெட்

த பெ. இல. 1034, சாற்றர்ட் வங்கி கட்டிடம் கொழும்பு-1.


## 31-ம் நாள் நினைவஞ்சலி



செல்வன் துரைசிங்கம் தெய்வேந்திரன் (பெடி)

(உள்நாட்டு வெளிநாட்டு மதுபான விற்பனவுக் கடை உரிமையாளர், பருத்தித்துறை.)

அன்னையின் மடியில்: 18-03-1954

ஆண்டவன் அடியில்: 29-11-1986

எங்கள் குடும்பத்தின் விடிவெள்ளியே! நீ ஊருக்கெல்லாம் உத்தமனாய், வீரத்தின் உறைவிடமாய் நட்புக்கு இலக்கணமாய், பாசத்தின் மறுவடிவாய், டண்பின் இருப்பிடமாய் எங்கள் குடும்பத்தின்குல விளக்காய்த் திகழ்ந்த எங்கள் வேங்கையின் மைந்தன்:

எங்கள் அன்பு மகனே! நீ மின்சாரம் தாக்கியதால் கணப்பொழுதில் எம்மை விட்டகன்றாய். ஆனால் உன் நினைவோ எங்கள் நெஞ்சை என்றென்றும் விட்டு அகலாதய்யா! கூப்பிட்ட குரலுக்கு ஓடி வந்து அன்புக்கரம் நீட்டிடும் அந்த அன்புமுகம் எங்கே? எங்களை நேசமுடன் காத்திடும் அந்தப் பாசமுகம் எங்கே? உன் மணவாழ்வு காணக் காத்திருந்த வேளையிலே மறுவாழ்வு தேடிப் போனாயோ? எங்கள் காவல் செய்வதின் 31ம் நாள் திதியன் திங்கட்கிழமை 29-12-1986ல்) கலந்துகொண்டு அவர் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்குமாறு அவரது உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் அன்புடன் அழைக்கும், அவரின் பிரிவால் வாடும்: ஐயா, அம்மா, அக்கா, தம்பியர், தங்கையர், மைத்துனன்மார் மருமக்கள், சித்தப்பாமார்.

நீ புரிய தவர்க்கு அதிசயப்பிறவி! உன்னைப்புரிந்தவர்க்கு தெய்வப்பிறவி!

Mr and Mrs
V Thuraisingam
(வ. துரைசிங்கம்)

மந்திகை,
பருத்தித்துறை.

(C 6436)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY
27 12 86 சனிக்கிழமை

# "நல்லெண்ண அடிப்படையில் வடக்குக்கு எவரும் வரலாம்; எம்முடன் பேசலாம் 'தமிழீழ' இலட்சியத்திலிருந்து நாம் விலகமாட்டோம்" புலிகள் பேச்சாளர் கருத்து

யாழ்ப்பாணம் சனி

"வடபகுதிக்கு தெற்கிலிருந்து எவரும் நல்லெண்ண விஜயம்மேற்கொண்டு வரலாம். எம்முடன் பேச்சுவார்த்தைகளையும் நடத்தலாம் அவர்களை நாம் வரவேற்போம் ஆனால் எமது தமிழீழ இலட்சியத்திலிருந்து நாம் ஒருபோதும் விலகமாட்டோம்" என்று தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் செய்தித்துறைப் பேச்சாளர் ஒருவர் 'ஈழநாடு'வுக்குத் தெரிவித்தார்.

சர்வோதயத் தலைவர் ஆரியரத்தின மற்றும் அரசாங்கத் தரப்பு முக்கியஸ்தர்கள் பலர் வடபகுதிக்கு விஜயஞ் செய்ய விருப்பந் தெரிவிப்பதுடன், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தவரைச் சந்திக்கவும் முன்வந்திருப்பது குறித்துக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அப்பேச்சாளர் மேலும் தெரிவித்ததாவது "ஆனையிறவுக்கு அப்பால் வடபகுதிக்கு சிங்களவர் எவரும் போகமுடியாது என்ற கருத்து தெற்கில் பரவலாக நிலவிவந்தது

ஆனால் இதுவரை நல்லெண்ண அடிப்படையில் எம்மைச் சந்திப்பதற்கு வடக்கு நோக்கி தெற்கிலிருந்து வந்தவர்கள் எம்மைப்பற்றி நன்கு புரிந்து கொண்டார்கள் இதன் மூலம் மேற்படி கருத்து தவறானது என்பதை நேரடியாக உணர்ந்து கொண்டார்கள்.

நல்லெண்ண அடிப்படையில் எந்த ஒரு சிங்களவரும் வடக்குநோக்கி வருவதற்கோ, எம்முடன் பேசுவதற்கோ நாம் தடைவிதிக்கப்போவதில்லை.

ஆனால் எமது போராட்டத்தை மழுங்கடிக்கச் செய்யும் அல்லது எமது இலட்சியத்திலிருந்து எமை விலக்கும் எந்த ஒரு முயற்சிகளுக்கும் நாம் இடமளிக்கப் போவதில்லை.

'தமிழீழம்' என்பதே எமது இலட்சியம். இதிலிருந்து நாம் விலகப்போவதில்லை எம்முடன் பேசவருபவர்களிடமும் இதையே நாம் தெரிவிப்போம் என்றார்.

இவர்மேலும் தெரிவிக்கையில் தமது இயக்கம் இந்தியாவின் சமரச முயற்சிகளுக்கு மதிப்பளிப்பதாகவும் அதனுடனான உறவில் மாற்றமில்லை எனவும் குறிப்பிட்டார். (வி)

## பிரஜைகள் குழு கூட்டம்

யாழ்ப்பாணம், சனி

பிரஜைகள் குழுக்களின் இணை புகைகுழுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் இந்து விடுதியில் நடைபெறவுள்ளது.

முக்கிய பல விடயங்கள் தீர்மானிக்கப்படவுள்ள இக் கூட்டத்தில் அக்கரைப்பற்று பிரஜைகள் குழுவும் கலந்து கொள்ளவுள்ளது. (சி)

## பருத்தித்துறையில் அகதிகள் பெயரில் மோசடி

பருத்தித்துறை சனி

பருத்தித்துறைப்பகுதியில் அகதிகளுக்கெனச் சிலர் நிதி, பொருட்களைச் பொதுமக்களிடமிருந்து சேகரித்து ஏப்பம் விடுவதாகப் பருத்தித்துறை அகதிகள் புனர்வாழ்வுச்சபையின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

இதனையடுத்து பருத்தித்துறை அகதிகள் புனர்வாழ்வுச் சபைத்தலைவர் திரு என் குணசீலன் விடுத்துள்ள அறிக்கையில் அகதிகளுக்கெனக் கூறிக்கொண்டு பொதுமக்களிடமிருந்து எவரும் நிதியோ பொருட்களோ சேகரிக்கக் கூடாதென்றும் அகதிகளுக்கான நிதி, பொருட்கள் சேகரிப்பது பற்றி பொது மக்கள் மிகவிழிப்பாக இருக்க வேண்டுமென்றும் அகதிகளுக்கு உதவிகளை வழங்கவிரும்புபவர்கள் பருத்தித்துறை அகதிகள் புனர்வாழ்வுச் சபையுடன் தொடர்பு கொள்ளலாமென்றும் குறிப்பிட்டுள்ளார். (ஓ)

## கடற்படையினரால் மீன்கள் பறிமுதல்

புங்குடுதீவு, வெள்ளி

புங்குடுதீவு கடல் பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்படையினர் நேற்று முன்தினம் கடற்றொழிலாளர்களிடம் இருந்து பிடிக்கப்பட்ட மீன்களை பறிமுதல் செய்துள்ளனர்.

ரோந்து விசைப்படகில் வந்த கடற்படையினர் மீன்களைப் பறிமுதல் செய்ததுடன் இனிமேல் இப்பகுதிகளுக்கு வரக்கூடாதென எச்சரிக்கையும் விடுத்தனராம்.

அப்போது கடற்படையினரின் இரண்டு பெரிய கப்பல்கள் நடமாடியவண்ணமிருந்தனவாம். (சி)

## "ஏனையவர்களை வெறுப்பதையும், வன்செயல்களையும் மனிதன் கைவிடவேண்டும்"

ரோம், டிச 26

ஏனைய வீரர்களை வெறுப்பதையும் வன்செயல்களையும் மனிதன் கைவிடவேண்டுமென்று பரிசுத்த பாப்பரசர் 2-வது அருளப்பர் சின்னப்பர் நேற்று விடுத்திருந்த நத்தார் தினச் செய்தியில் தெரிவித்தார்.

சென்பீற்றரின் தேவாலயத்தின் மேல்மாடியிலிருந்து பரிசுத்த பாப்பரசர் சதுக்கத்தில் குழுமியிருந்த சுமார் இரு லட்சம் மக்களுக்கு நத்தார் தினச் செய்தியை வாசித்தார்.

மனிதன் எதிர்காலத்தில் அனுபவிக்க இருக்கும் இன்னல்களையும் அவற்றிலிருந்து விடுபடுவதற்கான நம்பிக்கையையும் அவர் தனது செய்தியில் குறிப்பிட்டார்.

நத்தார் தினச் செய்தியை முடித்துக்கொண்டதும் 52 மொழிகளில் பாப்பரசர் நத்தார் வாழ்த்துக்களை வாசித்தார்.

லத்தீன், அரபு, வங்காளி, தமிழ், வியட்னாமிய மொழிகளின் உட்பட சோவியத்சார்பு நாடுகள் அனைத்திலும் பேசப்படும் மொழிகளிலும் அவர் வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

## வின்சென்ட்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சபைத் தலைவரும், பிரபல கப்பல் முகவருமான திரு. ஜெயபாலசிங்கமும் இன்று யாழ். வருகிறார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தினருடன் மட்டுமே இந்த அரசசார்ப்பு நல்லெண்ணக் குழு பேச்சுக்களை நடத்தும் என்று தெரிவிக்கப்பட்டது.

காங்கேசன்துறை பட்டின சபை மண்டபத்தில் இன்று காலை பத்து மணியளவில் இச் சந்திப்பு இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது.

## குண்டு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சென்னை பொலிஸ் புலனாய்வுப் பிரிவு இயக்குநர் க. மோகன்ராஜ். மேற்கண்ட விபரங்களை வெளியிட்டுள்ளார்.

## தொழில்நுட்ப கல்வி ஆண்டு

வல்வெட்டித்துறை, சனி

யாழ் மாவட்டக் கல்விப் பணிப்பாளர் 1987ம் ஆண்டை தொழில் நுட்பக்கல்வி ஆண்டாகப் பிரகடனப் படுத்தியதைத் தொடர்ந்து, அதன் வேலைத்திட்டங்களைத் தயாரித்தல். செயற்பாடுகள் பற்றிய விளக்கங்கள் ஆகியன தொழில் நுட்ப அலுவலர் ச. சுப்பிரமணியத்தினால் தொழில் நுட்ப பாட ஆசிரியர்களுக்கான சேவைக்கால கல்வி வகுப்பு மூலம் யாழ் கனகரத்தினம் மகா வித்தியாலயத்தில் நெறிப்படுத்தப் படுகின்றது.

# மரண அறிவித்தல்

### அருளையா ஏபிரஹாம்

(இளைப்பாறிய கல்வி ஆலோசகர்)

அருளையா ஏபிரஹாம் 26-12-86 இல் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற அலன் ஏபிரஹாம் (யாழ்ப்பாணக் கல்லூரி) அவர்களின் அன்பு மகனும், லீலாவின் அன்பு கணவரும், சீலன் அருளையாவின் (கிறீக்லேயிஸ் வங்கி கொழும்பு) அன்புத்தந்தையாரும், சாந்தியின் (முஸ்லீம் வித்தியாலயம் மொரட்டுவா) மாமனாரும் அலன். எட்வேட், (பரிதோமஸ் கல்லூரி கொழும்பு) மாணவர்கள் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் அடக்க ஆராதனை 27-12-86 (இன்று) சனிக்கிழமை அவரது இல்லத்திலிருந்து பி ப 2-00 மணிக்கு அடக்கத்திற்காக கொழும்புத்துறை பெந்தேகொஸ்தே சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

73, நாவலர் ரோட் சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

(C 6580)

### வேலுப்பிள்ளை தனபாலசிங்கம் (குணபால்)

முடமாவடி திருநெல்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு வேலுப்பிள்ளை தனபாலசிங்கம் (குணபால்) கொழும்பில் காலமாகிவிட்டார். இவர் கொழும்பு இல: 10, ஆட்டுப்பட்டித்தெரு, 'தக்சலா ரேடேஸ்', இல: 11, சென் ஜோன்ஸ் வீதி, 'என். சங்கரப்பிள்ளை அன் சன்ஸ்' உரிமையாளரும், சரஸ்வதியின் அன்புக்கணவரும் ராகவன் யாழ் இந்து, உமையாள் (யாழ் இந்து மகளிர்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற மதியாபரணத்தினதும், பரமேஸ்வரியின் அன்புச் சகோதரருமாவார். இவர் சின்னப்பு நவரத்தினராசா (இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்) வின் மைத்துனருமாவர். அன்னாரின் ஈமக்கிரியைகள் 43/20, கோவில்வீதி, நல்லூர், யாழ்ப்பாணத்தில் நாளை 28-12-86 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று தகனக்கிரியைக்காக அன்று காலை 10 மணிக்கு திருநெல்வேலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
சி. நவரத்தினராசா

(C 6581)

### கணபதிப்பிள்ளை சின்னப்பு

(கோலாலம்பூர்)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கோலாலம்பூரில் வசித்தவருமாகிய கணபதிப்பிள்ளை சின்னப்பு (வயது 98), 16-12-86-ல் கோலாலம்பூரில் காலமாகிவிட்டார். திரு எம். மாணிக்கஇடைக்காடரின் மாமனாரும், திருமதி சிவமங்களம் மாணிக்க இடைக்காடரின் தந்தையும் ஆகிய கணபதிப்பிள்ளை சின்னப்பு அவர்களின் இறுதிச்சடங்குகள் கோலாலம்பூரில் நிகழ்ந்துள்ளன. என்பதை அன்னாரின் உறவினர் நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

C 3402

உறவினர்.

# மரண அறிவித்தல்

### வெற்றிவேலு செல்லத்துரை (ஐயக்கோன்)

வெற்றிவேலு செல்லத்துரை ஐயக்கோன் சட்டத்தரணி, (முன்னைநாள், சென்றல் டல்கம்பனின் மனேச்சர்) காலமானார். அன்னார் தவமணியின் அன்புக்கணவர் ஆவார் அன்னாருடைய இறுதிக்கிரியைகள் உடுவில் சித்தாவத்தை இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக 27-12-86 இன்று சனி கிழமை காலை 10 மணியளவில் பூவோடை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்; அபிமன்னசிங்கம் மாணிக்கசோதி.
சித்தாவத்தை,
உடுவில்.

C 6560

### J. சின்னப்பா J. P.

நவாலி திரு. சின்னப்பா J. P. (Retd. Bursar, யாழ்ப்பாணக் கல்லூரி) காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற ஞானம்மா ஆசிரியையின் அன்புக் கணவரும், குணரத்தினம் (யு. என். டி. பி., கானா), பேராசிரியர் இராசரத்தினம் (நியு இங்கிலாந்து பல்கலைக்கழகம். அவுஸ்திரேலியா), கனகரத்தினம் (முன்னாள் திட்டப் பொறியியளாளர். Aramco., செல்வரத்தினம் ஜெர்மனி), திருமதி இரத்தினதேவி ஜெயரத்தினம், பஞ்சரத்தினம் (அத்தியட்ச பொறியியலாளர், கட்டிடத்திணைக்களம், மட்டக்களப்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஆனந்தலீலா (கானா), பத்மா (அவுஸ்திரேலியா) தவேஸ் (மட்டக்களப்பு), தங்கமலர் (மூளாய்த்தீவு) ஜெயரத்தினம் (அதிபர், யாழ்ப்பாணக் கல்லூரி, விவசாய நிறுவனம், மருதனாமடம்) ஆகியோரின் மாமனாரும் ஆவார் அன்னாரின் நல்லடக்க விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

சின்னப்பா வீதி,
நவாலி,
மானிப்பாய்.

தகவல்:
C. ஜெயரத்தினம்.

(C 6583)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1986-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 27-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P. O. Box 49. Telegrams: Eelanadu
Telephone: 22389—24126

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org